# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • நவம்பர் 16, 2024 Weekly E-paper • November 16, 2024





## அணைந்து கொண்டிருக்கிறதா அதிமுக?

சுப.வீரபாண்டியன்









### தமிழருக்கு முன்னுரிமை வேண்டும்

வெற்றிச்செல்வன்

### அமரன் திரை விமர்சனம்

ராஜசங்கீதன்

### பார்ப்பனர்களை வெறுத்தாரா பெரியார்?

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● நவம்பர் 16, 2024 Weekly E-paper ● November 16, 2024


# அணைந்து கொண்டிருக்கிறதா அதிமுக?

சுப.வீரபாண்டியன்



*1972 ஆம் ஆண்டு, முழக்கத்தோடு தொடங்கப்பட்ட அதிமுக, இப்போது முனகலோடு ஊர்ந்துகொண்டிருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது!*

ஜெயலலிதாவிற்கு மக்களிடம் ஒரு செல்வாக்கு இருந்ததால், எம்ஜிஆருக்குப் பிறகும், அந்தக் கட்சி தொடர்ந்தது! ஆனால் ஜெயலலிதாவுக்குப் பின்னால் கட்சியை வழிநடத்தக் கூடிய ஒரு தலைமையும், ஆளுமையும் இல்லாமல் போய்விட்டது! இப்போது அந்தக் கட்சி நான்கு துண்டுகளாக உடைந்து கிடக்கிறது! ஒப்பீட்டளவில் எடப்பாடிக்குக் கொஞ்சம் கூடுதல் ஆதரவு இருக்கலாம். ஆனால் அதுவும் கூட, இனிமேல் வரும் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற்குப் போதுமானதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும் !

மற்ற மூன்று துண்டுகளும் மிகப் பலவீனமாக உள்ளன. சசிகலா அரசியலில் இருக்கிறாரா, இல்லையா என்பது அவருக்கே தெரியாத ரகசியமாக இருக்கிறது. டிடிவி தினகரன் பணத்தையும், சாதியையும் மட்டுமே நம்பி இருக்கிறார். எடப்பாடிக்குச் சரியான போட்டியாக வருவார் என்று நம்பப்பட்ட ஓபிஎஸ் நிலைமை கவலைக்கிடமாக ஆகி இருக்கிறது!

ஓபிஎஸ் தன் கட்சிக்கென்று ஒரு தொலைக்காட்சி, ஒரு பத்திரிகை வேண்டும் என்று கருதியதாகவும், அதன் முதல் கட்டமாக, புரட்சித் தொண்டன் என்னும் ஏட்டினைத் தொடங்கியதாகவும் நாம் அறிகிறோம். ஆனால் அந்த ஏடு தொடங்கப்பட்ட ஓராண்டிற்கு உள்ளாகவே முடங்கிக் கிடக்கிறது. அங்கு பணியாற்றும் ஊழியர்கள் தங்களுக்கு ஊதியம் கூடச் சரியாக வருவதில்லை என்று சொல்வதாக ஒரு தொலைக்காட்சி கூறுகிறது. எனவே எந்த நிர்வாக இயந்திரமும் இல்லாமல், தன் கூட ஒரு பத்துப் பேரை வைத்துக் கொண்டு, ஓபிஎஸ் அதனை ஒரு கட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். விரைவில் ஏதோ ஒரு ஜோதியில் கலந்து விடுவார் என்று கூறுகிறார்கள்!

இப்படி மூன்று பிரிவுகள் அதிமுகவில் வலிமை இழந்து கிடந்தாலும், அதனைப் பயன்படுத்தி எடப்பாடி தன் கட்சிப் பிரிவை வலிமையாக்கி விடவில்லை. அங்கேயும் உட்கட்சிச் சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று செய்திகள் வருகின்றன.

இப்படி அதிமுக கொஞ்சம் கொஞ்சமாக அணைந்து கொண்டிருப்பதில் நமக்கு மகிழ்ச்சி இல்லை. அப்படி நடந்து விடுமானால், அந்த இடத்திற்கு இன்னும் மோசமான இன்னொரு பிற்போக்குக் கட்சி வந்து நிற்கக் கூடும். அந்த நிலை தவிர்க்கப்பட்டு, அதிமுக எப்போதும் எதிர்க்கட்சியாகவாவது விளங்க வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்! ●

## பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்

**17.11.24** – மாலை 4 மணி – முளகுமூடு, குமரி மாவட்டம் – திமுக அயலக அணி சார்பில் கருத்தரங்கம்.

**19.11.24** – நாகர்கோயில் – கல்லூரி மாணவர்களுடன் ஒரு கலந்துரையாடல்!

# தமிழருக்கு முன்னுரிமை வேண்டும்

**வெற்றிச்செல்வன்**

கர்நாடக மாநிலம் அனெக்கேலில் உள்ள செந்தன்புரா பகுதியில் கன்னடக் கவிஞர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் பெயர்களை, அப்பகுதியில் உள்ள தெருக்களுக்குச் சூட்ட நகர் நிர்வாகம் முடிவு செய்து, அவ்வாறே பெயர்களைச் சூட்டி பெயர்ப்பலகைகளை வைத்துள்ளது. ஆனால் அங்கு வசித்து வந்த வட இந்தியர்கள் இதற்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்ததுடன் அப்பலகைகளை ஆட்களை வைத்து பெயர்த்து சாலையில் வீசியுள்ளனர். இதனால் பெரிய பரபப்பு ஏற்பட்டு, பின்னர் கன்னட அமைப்புகள் போராட்டம் நடத்தும் சூழல் உருவான பின்னர், கன்னடப் பெயர்ப் பலகைகளை வைக்க ஒப்புக் கொண்டு வட இந்தியர்கள் அவரவர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

கர்நாடகாவின் கன்னட மொழிக்கான கோகாக் இயக்கத்தை நினைவுகூர்ந்து பேசும்போது, இந்நிகழ்வினைக் கண்டித்து அம்மாநில முதலமைச்சர் சித்தராமையா பேசியுள்ளார். (1980ஆம் ஆண்டு கர்நாடகாவில் சமஸ்கிருதம் முதல்மொழி ஆக்கப்பட்டு, கன்னடம் பின்னுக்குத் தள்ளப்பட்டபோது பெரும்போராட்டம் வெடித்தது. பின்னர் கோகாக் என்பவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு கன்னடத்தை முதல் மொழியாக்க பரிந்துரை செய்தது).



**உயர்ஜாதி வடவர்கள் வசிக்கும் தெருவில் மீண்டும் கன்னட பெயர்ப் பலகை.**

ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் சிறுபான்மையினர், ஒரு பகுதியில் பெரும்பான்மையினராக ஆகும்போது இத்தகைய நிகழ்வுகள் ஏற்படுகிறது. இந்நிகழ்வினைச் சென்னையின் சௌகார்பேட்டை பகுதியோடும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். பெரும்பான்மை இந்தி பேசும் மக்களின் இருப்பிடமாக மாறிவிட்ட பகுதி அது. இதே இடத்தில்தான், தங்கசாலைத் தெருக்களில் "தமிழ் வாழ்க! இந்தி ஒழிக" என்ற முழக்கம் 1938ஆம் ஆண்டில் விண்ணதிர ஒலித்தது. அதிலும் நவம்பர் 12, 13 நாட்களில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ள பெண்களுக்குத் தந்தை பெரியார் அழைப்பு விடுத்ததை அடுத்து, போராட்டக் களம் தீவிரம் அடைந்தது. அதே தெருக்களில்தான் இன்று இந்தி தவிர்க்க முடியாத மொழியாகி இருக்கிறது. இதனால் ஏற்படும் கலாச்சாரத் தாக்கமும், பாதிப்பும் அளவிட முடியாதது.

இந்திய அரசியலமைப்பு (பிரிவு 19 (1) (e)) இந்தியாவைச் சேர்ந்த குடிமகன் ஒருவனுக்கு நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று வாழ்வதை அவனுடைய அடிப்படை உரிமையாக அங்கீகரித்திருக்கிறது. கல்வி மற்றும் வேலைவாய்ப்பு காரணமாக மக்களுடைய புலம்பெயர்வு இன்றியமையாததாகி வருகிறது. பெங்களூருவில் மட்டுமல்லாமல், அமெரிக்காவில்கூட மென்பொருள் துறையில் செயல்படும் ஏராளமான தமிழர்கள் உண்டு. தேவையின் (demand) காரணமாக பலர் புலம்பெயர்ந்து வாழும் சூழலில் இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டின் கட்டுமானத் தொழில்களிலோ, உணவகங்களிலோ புலம்பெயர் தொழிலாளர்கள் அதிகம் பணிபுரிவது என்பது தமிழ்நாட்டில் அத்தகைய பணிகளுக்கான ஆட்கள் இல்லாமையினாலா அல்லது மிகக் குறைந்த ஊதியத்திற்கு வட இந்தியத் தொழிலாளர்கள் ஒப்புக் கொள்வதினாலா என்பதை நாம் மனசாட்சியோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு சுரண்டப்படும் தொழிலாளர்களைப் பற்றிய கணக்கெடுப்போ, புள்ளி விவரங்களோ அரசால் முறையாகத் தொகுக்கப்படுவது இல்லை. அதே வேளையில் நியாயமான ஊதியத்தைக் கோரும் தமிழகத் தொழிலாளர்களுக்கு அந்த வேலைவாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. ஆனால் இதனை வர்க்கப் பார்வையின் அடிப்படையில் மட்டுமே பார்க்கும் தோழர்கள், தமிழ்நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் படித்து முன்னேறி விட்டதால் அத்தகைய உடல் உழைப்பைக் கோரும் வேலைகளுக்குத் தமிழர்கள் வருவதில்லை என்ற பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்கின்றனர். அண்மையில் சென்னையில் உள்ள நியாயவிலைக் கடையில் பணிபுரிவதற்கான அறிவிப்பு வெளியானது. சென்னையில் மட்டும் உள்ள சில நூறு பணியிடங்களுக்கு ஆயிரக்கணக்கானோர் விண்ணப்பித்துள்ளனர். இதுதான் தமிழர்கள் வேலைவாய்ப்பில் தன்னிறைவு பெற்று விட்டனர் என்பதற்கான சான்றா? எனவே உடலுழைப்பில் ஈடுபடும் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் இல்லாததால்தான் வட இந்தியர்கள் இங்கு வந்து பணிபுரிய நேரிடுகிறது என்னும் வாதம் அடிப்படையற்றது.

அதேபோல, மொழி, கலாச்சாரம் ஆகியவற்றில் முற்றும் முழுவதுமாக நம்மிடம் இருந்து விலகி நிற்கும் வட இந்தியத் தோழர்கள் நாளை வாக்குரிமையும் பெறும்போது, அதன் தாக்கம் தேர்தலிலும் எதிரொலிக்கும். "ஜெய் ஸ்ரீராம்" என்ற முழக்கம் போதும் அவர்களை ஒன்றிணைக்க. "தமிழ்நாடு வாழ்க" என்று சொன்னால் அவர்களால் புரிந்து கொள்ளக்கூட இயலாது. அவர்களுக்கு வாக்குரிமை வழங்காமல் இருப்பதுதான் தீர்வு என்று நினைக்கலாம். ஆனால் அரசியலமைப்பின் 325ஆவது பிரிவின்படி இந்தியக் குடிமகன்/ள் ஒருவருக்கு அவருடைய பிறப்பிடத்தின் அடிப்படையில் வாக்குரிமையை மறுக்க இயலாது. எனவே இதுவும் தீர்வல்ல.

பின்னர் எதுதான் தீர்வு என்றால், அதனைக் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய சூழலில்தான் இருக்கிறோம். கர்நாடகாவில் அண்மையில் உள்ளூர் மக்களுக்குத் தனியார் துறை வேலைவாய்ப்பில் குறிப்பிட்ட விழுக்காடு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற சட்டவரைவு கொண்டுவரப்பட்டது. தமிழ்நாட்டில் அரசுப் பணிகளில் தமிழ் தெரிந்தவர் மட்டுமே நுழைய வகை செய்யும் விதிமுறைகள் அண்மையில் கொண்டு வரப்பட்டன. இதுபோன்ற செயல்பாடுகளின் மூலமே தமிழர்க்கான உரிமையை உறுதி செய்ய இயலும். கர்நாடகாவில் கிளம்பிய பெயர்ப்பலகைப் பிரச்சினை தமிழ்நாட்டிலும் வருவதற்கு முன்பாக இதுகுறித்து ஆழ்ந்து சிந்தித்துத் தமிழக அரசு இப்பிரச்சினையில் முடிவெடுக்க வேண்டும். ●

# அமரன்

● ராஜசங்கீதன்



இந்திய ராணுவத்துக்குள் உண்மையில் இந்துத்துவம் புரையோடி போயிருக்கிறது. லடாக்கில் நாங்கள் சென்றிருந்தபோது பார்த்தபோதே, ராணுவ தளங்களில் இந்துத்துவக் கொடிதான் பறக்கக் கண்டோம். இந்திய தேசியவாதம் என்பது இந்து பெரும்பான்மை தேசியவாதம்தான். அதை தடுக்கும் ஒரே விஷயம் இந்திய அரசியல் சாசனம் முன் வைக்கும் மதச்சார்பற்றதன்மை. எனவேதான் அதைக் கொண்டு, இந்திய ராணுவத்தில் எழுப்பப்படும் அமரன் திரைப்படம் காட்சிப்படுத்தும் பஜ்ரங்பலி கோஷத்தை கேள்வி கேட்பது நம் கடமை ஆகிறது.

ட்ரெயிலரில் This is the face of Indian Army என சிவகார்த்திகேயன் கத்தியபோதே இப்படத்தை பார்ப்பதில்லை என முடிவெடுத்து விட்டோம். இந்து பெரும்பான்மைவாத பாசிசம் புரிந்தவனாக, இந்திய ராணுவத்தின் கொட்டம் அறிந்தவனாக, அண்மையிலுள்ள ஈழத்தில் இந்திய ராணுவம் ஆடிய ஆட்டத்தின் மீது கோபம் கொண்டவனாக 'இந்திய ராணுவத்தின் குரூர முகத்தை' மிகச் சரியாகவே அறிந்திருக்கிறேன்.

ஆனால் படம் வெளியானதில் இருந்து பல இஸ்லாமிய தோழர்கள், தங்களின் வருத்தத்தை தனிபட்ட முறையிலும் பொதுவெளியிலும் பதிவு செய்தனர். அநேகமாக இப்படக் குழு, இப்படத்தை போட்டுக் காட்டாத அரசியல் கட்சிகள், இடதுசாரி கட்சிகள் மற்றும் விசிக போன்றவை மட்டும்தான் என நினைக்கிறேன். இடதுசாரி கட்சிகள் பொருட்படுத்தப்பட வில்லையா அல்லது அழைக்கப்பட்டு தவிர்த்து விட்டார்களா என தெரியவில்லை. எது நடந்திருந்தாலும் நல்ல விஷயம்தான். இத்தகைய ரத்தத்தில் நம் கைகள் கறைபட வேண்டியதில்லை.

இந்திய நாடு உருவாக்கம் தொடங்கி அமைப்புப்பூர்வமாக தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருபவர்கள் இஸ்லாமியர். அதிலும் காஷ்மீர் மக்களுக்கு இந்தியா இழைத்தது பச்சை துரோகம். உதவுவதற்காக ஒரு வீட்டுக்கு சென்றுவிட்டு, அந்த வீட்டையே தனக்கு உரிமையாக்கிய ரவுடி வேலையைத்தான் இந்தியா செய்தது. உதவி கேட்டு அழைத்தவன், வீட்டை ஆக்கிரமித்த ரவுடியை வெளியேறும்படி சொல்வதைத்தான் இந்தியா, தீவிரவாதம் என அழைக்கிறது.

காஷ்மீர் தொடங்கி இந்தியாவிலுள்ள எல்லா இஸ்லாமியரும் தங்களின் இந்திய தேசப் பற்றை உறுதி செய்து கொண்டே இருக்கும்படி கோரும் இந்திய அரசு, விடுதலைப் போராட்டம் தொடங்கி இந்தியப் பொருளாதாரம் வரை இஸ்லாமியரிடமிருந்து பெற்றதும், பெற்றுக் கொண்டிருப்பதும் மிகவும் அதிகம். இருந்தும் அவர்களை அச்சுறுத்தியே வைத்திருக்கும் வதைத்துறுத்து மோகிக்கும் வேலையை தன்னுடைய இந்திய தேசிய அறிஞர்கள் மற்றும் கலைஞர்களை கொண்டு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

Ministry of Defence-க்கு படத்தை காட்டி அவர்களின் பாராட்டுக்கு பிறகு ரிலீஸான படம் என அமரன் படம் குறித்து அப்பட இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி பேசியிருக்கிறார். இந்த ஒரு வாக்குமூலமே அப்படம் ஒன்றிய பாஜக அரசின் ஒப்புதலுடன் எடுக்கப்பட்ட படம் என்பதை கொடுத்து, அப்படம் மீதான நம் விமர்சனங்களை நியாயப்படுத்தி விடுகிறது. எனினும் அதற்குப் பிறகு அவர் பேசும் விஷயங்கள், பொதுப்புத்தியில் இருந்து பேசுபவர்கள் மற்றும் எழுதுபவர்களுக்கு சரிதானே என்பது போன்ற தோற்றத்தை கொடுக்கும் வாய்ப்பு இருப்பதால் இப்பதிவு.

"ஒவ்வொரு ரெஜிமெண்ட்டுக்கும் ஒவ்வொரு war cry இருக்கு. மெட்ராஸ் ரெஜிமெண்டுக்கு 'வீரமதராஸி... அடி கொல்லு, அடி கொல்லு'ன்னு முழக்கம் இருக்கும். அது போலதான் ராஜ்புட் ரெஜிமெண்ட்டுக்கும் 'பஜ்ரங் பலி ஜே'ங்கற முழக்கம் இருக்கு. அதைக் காட்டாம படம் எடுத்ததான் தப்பு!" எனப் பேசுகிறார் இயக்குநர்.

முதலில் ராஜ்குமார் பெரியசாமி ஆவணப்படம் எடுக்கவில்லை. Creativity என்கிற சுதந்திரம் அவருக்கு படத்தில் இருக்கிறது. பஜ்ரங் பலி கோஷத்தில் மதமும் குறிப்பிட்ட கட்சியின் கோஷமும் - ஏன் சங்கப் பரிவார அமைப்பின் பெயரே கூட இருக்கிறது எனத் தெரிந்து தவிர்க்க நினைத்தால், அவர் தவிர்த்திருக்கலாம். அல்லது அது சார்ந்த விமர்சனம் இருக்கும்பட்சத்தில், அக்கோஷத்தை வைத்து விமர்சனப் பூர்வமான உள்ளடக்கத்தை - குறியீடாக கூட - வைத்திருக்க முடியும். ஆனால் ராஜ்குமார் பெரியசாமி அதை செய்யவில்லை.

ஆகவே பஜ்ரங்பலி என்பது என்ன என்பதும் அது என்ன மாதிரியான விமர்சனங்களை கொண்டு வரும் என்பதும் யாரெல்லாம் அதில் சந்தோஷம் கொள்வார்கள் என்பதும் தெளிவாக விவாதிக்கப்பட்டே காட்சியில் இடம்பெற்றிருக்க முடியும்.

மக்பூல் பட், சையது ஷா கிலானி போன்றோரின் புகைப்படங்கள் இடம்பெறும் காட்சிகள் இப்படத்தில் உள்ளன. குறைந்த காட்சி நேரமாகவே இருந்தாலும், ஒரு கலை இயக்குநர் அல்லது கலை உதவி இயக்குநர் தாமாக சென்று அந்த புகைப்படங்களை காட்சிக்குள் வைத்து விட மாட்டார். குறைந்தபட்சம் 'காஷ்மீர் தீவிரவாதம்' (காஷ்மீர் தேசிய இன விடுதலைக்கு இந்தியா சூட்டியிருக்கும் பெயர்களில் ஒன்று) சார்ந்தவர்களின் புகைப்படங்கள் வேண்டும் என்றேனும் இயக்குநரின் தரப்பு உத்தரவிட்டிருக்கும். அதிகபட்சமாக இவர்களின் பெயர்களை குறிப்பிட்டே கூட கேட்கப்பட்டிருக்கும். எப்படி நடந்திருந்தாலும் அப்படங்கள் இடம்பெற்றது யதேச்சையான விஷயம் அல்ல.

அப்படங்களுக்கு பின் ஓர் அரசியல் தேர்வு இருக்கிறது. காஷ்மீரில் நடக்கும் மோதலில் எந்த தரப்பை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்கிற முடிவு இருக்கிறது. அந்த முடிவிலிருந்தும் தேர்விலிருந்தும்தான் தீவிரவாதிகளாக இவர்களின் புகைப்படங்களை காட்டும் செயல் அரங்கேறியிருக்கிறது. இதே பாணியிலான தேர்வும் முடிவும்தான் 'பஜ்ரங்பலி' கோஷம் வைப்பதிலும் இருக்கிறது என சொல்கிறோம்.

'இல்லை, அந்த கோஷம் நடைமுறையில் அப்படி இருப்பதால்தான், அதை அப்படியே ஆவணப்படுத்துகிறோம்' என கழுவும் நீரில் மீனை நழுவ விடும் இயக்குநரிடம் நாம் கேட்கும் கேள்வி இதுதான். அதே வகை ஆவணப்படுத்தும் முனைப்புடன் ஏன் தேசிய இன விடுதலைப் போராட்டம் காண்பிக்க படவில்லை? ஒரு வசனம் கூட காஷ்மீர் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக இல்லாமல் 'பாஜக'வின் இந்துத்துவ தேசியவாதத்தை படம் அப்பட்டமாக பேசுகிறதே, எப்படி?

'ஒரு பக்கத்தில் மட்டும் யதார்த்தத்தை அப்படியே ஆவணப்படுத்துவோம், ஆனால் மறுதரப்பை காட்டுகையில் அப்படி யோசிக்கக் கூட மாட்டோம்' என்றால் அதில் இயக்குநரின் பக்கசார்பு மட்டும்தான்.

'ஒவ்வொரு ரெஜிமெண்டுக்கும் ஒவ்வொரு முழக்கம் இருக்கிறது' என்கிறார் இயக்குநர். அதை ஆதரித்து 'லாஜிக்'குடன் பேசுவதாக நம்பி ஒரு கூட்டமும்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## பார்ப்பனர்களை வெறுத்தாரா பெரியார்?

தந்தை பெரியார் பார்ப்பன வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்று பார்ப்பனர்களால் தொடர்ந்து அவதூறு பரப்பப்பட்டு வருகிறது. "பாம்பையும், பார்ப்பனரையும் ஒன்றாகப் பார்த்தால், பாம்பை விட்டுவிட்டுப் பார்ப்பானை அடி" என்பது அதில் முக்கியமானது.

அந்தப் பழமொழி ஒரு வடநாட்டுப் பழமொழி. 'Verdict on India' என்ற நூலில் அந்தப் பழமொழி மேற்கோள் காட்டப்பெற்றுள்ளது.

மாறாக, பெரியார் பார்ப்பனர் குறித்துக் கூறுவது என்ன? "பார்ப்பனத் தோழர்களே" என்று பார்ப்பனர்களைக் குடிஅரசு இதழில் விளிக்கிறார் பெரியார்.

"எந்தப் பார்ப்பனரிடமும் எனக்குத் தனிப்பட்ட முறையில் விரோதமோ, பகைமையோ கிடையாது. பார்ப்பனியத்தை அடியோடு ஒழிப்பது என்பதுதான் எனது முக்கியமானதும் முதன்மையானதுமான காரியம்.

சுயநலமும், பதவி மோகமும், பணத்தாசையும் கொண்ட சில பார்ப்பனர்கள் பதவிக்கு வந்து, தங்கள் சமூகத்தாருக்கு ஏதோ உத்தியோகம் கொடுக்கப்போவதாகச் சொல்லிக் கொண்டு, பல பார்ப்பனரல்லாதாருக்குக் கேடு விளைவித்துக் கொண்டும், தங்கள் சுயநலத்துக்கு ஏராளமான பணம் பல நாணயக் குறைவான வழிகளில் சம்பாதித்துக் கொண்டும் வருவதை நடுநிலைமையுள்ள பார்ப்பனர்கள் ஆதரித்து வருவதாலேயே இன்று நாட்டில் பார்ப்பனியத்தின் மீது உள்ள வெறுப்பு பார்ப்பனர்கள் மீது திரும்புவதை அவர்கள் அறிவதில்லை" (குடிஅரசு, 17.09.1939) என்கிறார் பெரியார்.

நிலைமை இவ்வாறிருக்கத் தொடர்ந்து உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புவதில் பாஜகவினரும், பார்ப்பனரும் ஈடுபட்டு வருகின்றனர்.

மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டு இயக்கம் கட்டிய தந்தை பெரியாருக்கு, பார்ப்பனர் மீது வெறுப்பு இருந்ததாக அவதூறு பரப்புவது சிறிதும் அறிவு நாணயமற்ற செயல்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

அடித்து விட்டுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு போர் முழக்கம் இருக்கும் ராணுவக் குழுக்கள் யாருக்காக போராடுகிறார்கள்? உதாரணமாக ராஜ்புட் ரெஜிமெண்ட் வீரர்கள், ரஜபுத்திரர்களுக்காக போராடுகிறார்களா, அல்லது இந்தியாவுக்காகவா? சீக்கிய ரெஜிமெண்ட் வீரர்கள், சீக்கிய மக்களுக்காக போராடுகிறார்களா, இந்தியர்களுக்காகவா?

இந்தியர்களுக்காகதான் போராடுகிறார்கள் எனில், இந்தியாவை வழிநடத்துவது எது? அரசியல் சாசனத்தின் மதச்சார்பின்மையா, பஜ்ரங்பலியா?

இதே சீக்கியர்கள், சீக்கிய ரெஜிமெண்டுக்கான இதே கோஷத்துடன் டெல்லி எல்லையில் விவசாயிகளுடன் ஒரு வருடத்துக்கும் மேலாக போராடினார்களே, அப்போது இந்திய அரசு 'இந்திய ராணுவத்தின் முக்கியமான ரெஜிமெண்டை சேர்ந்தவர்கள்' என உடனே ஓடி வந்து கோரிக்கைகளை கேட்டதா என்ன?

லாஜிக் பேசலாம். ஆனால் அந்த லாஜிக்கிலாவது கொஞ்சம் லாஜிக் இருக்க வேண்டும்.

இந்திய அரசியல் சாசனத்துக்கு எதிரான ஒன்று, இந்திய ராணுவத்தில் செய்யப்படுகிறது எனில், அதை அம்பலப்படுத்த வேண்டும். அல்லது பொருட்படுத்தாமல் இருந்துவிட வேண்டும். காட்சியில் காட்டி விட்டு, அது தவறு என விமர்சனம் வைக்கப்படுகையில், 'அது தவறொன்றுமல்ல, அதுதான் மரபாக இருக்கிறது' எனப் பேசுவது அபத்தம்.

ராஜ்புட் ரெஜிமெண்டுகள், ஜாட் ரெஜிமெண்டுகள் போல குறிப்பிட்ட சாதியப் பெயர்கள் கொண்டு இந்திய ராணுவம் இயங்குவதை பற்றிய அதிருப்தியை முன்னாள் ராணுவ அதிகாரிகள் பலரும் எழுதியிருக்கின்றனர். சமீபத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் மறைந்த முப்படைத் தளபதி பிபின் ராவத் கூட, ஒரு சமயத்தில், 'ராணுவத்துக்குள் அரசியல் தலையிடக்கூடாது' என்றும் 'ராணுவத்தின் மதச்சார்பின்மைக்கு பங்கம் வரக் கூடாது' என்றும் கூட பேசியிருந்தார்.

இவற்றைத் தாண்டி 'பஜ்ரங் பலி' என மதவாத கோஷம் போடுவதுதான் யதார்த்தமாக இந்திய ராணுவத்தில் இருக்கிறது என இயக்குநர் கோருவார் எனில், மதச்சார்பின்மையை முன் வைக்கும் இந்திய அரசியல் சாசனத்துக்கு எதிராக இந்திய ராணுவம் இருப்பதாக இயக்குநர் சொல்கிறார் என எடுத்துக் கொள்ளலாமா?

இறுதியாக "'யாரோ எங்கேயோ பேட்டி கொடுக்கறாங்க, கேள்வி கேட்கறாங்க'ன்னு நம்ம எல்லாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை!" என்கிறார் இயக்குநர் ராஜ்குமார்.

பதில் சொல்ல வேண்டும் ராஜ்குமார்!

குறிப்பாக, இந்தியாவின் அங்கமாக இருக்கும் இஸ்லாமிய மக்களையும் நாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் காஷ்மீர் மக்களையும் பற்றிய ஒரு பிம்பத்தை படம் கொடுக்கிறதெனில், அதற்கான கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும் என்பதுதான் பொறுப்பு.

இரவோடு இரவாக இணையத்தை துண்டித்து விட்டு, சம்பந்தப்பட்ட மக்களுக்கு கூட தெரியாமல் அடுத்த நாளில் ஜம்மு காஷ்மீரை துண்டாடி, சிறப்பு அந்தஸ்தையும் ரத்து செய்து விட்டு, கேள்வி கேட்டவர்களை ஒடுக்கி, சிறையில் தள்ளியவர்களுக்கும் உங்களின் பேச்சுக்கும் என்ன வித்தியாசம் ராஜ்குமார் பெரியசாமி?

பதிலளிக்க வேண்டியதில்லை என்பதும் ஒருவகையில் பதில்தான். பாசிசம் அளிக்கும் பதில் அது!

அமரன், தமிழ்ச்சூழலுக்கேற்ற Kashmir Files!